

பாமாலை 246 அன்புருவாம் எம் ஆண்டவா

1 அன்புருவாம் எம் ஆண்டவா,
எம் ஜெபம் கேளும், நாயகா;
நாங்கள் உம் ராஜ்யம் ஆண்டாண்டும்
பாங்குடன் கட்ட அருளும்.

2 வாலிபத்தில் உம் நுகமே
வாய்மை வலுவாய் ஏற்றுமே,
வாழ்க்கை நெறியாம் சத்தியம்
நாட்டை அருள்வீர் நித்தியம்

3 அல்லும் பகலும் ஆசையே
அடக்கி ஆண்டு, உமக்கே
படைக்க எம்மைப் பக்தியாய்
பழுதற்றதே பலியாய்

4 சுய திருப்தி நாடாதே,
உம் தீர்ப்பை முற்றும் நாடவே;
வேண்டாம் பிறர் பயம் தயை
வீரமாய்ப் பின் செல்வோம் உம்மை

5 திடனற்றோரைத் தாங்கிட
துக்கிப்பவரை ஆற்றிட;
வாக்கால் மனத்தால் யாரையும்
வருத்தா பலம் ஈந்திடும்

6 எளிதாம் வாழ்க்கை ஏங்கிட
தீங்கற்ற இன்பம் தேடிட
மன்னிக்க முற்றும் தீமையை
நேசிக்க மனு ஜாதியை